www.Padasalai.Net www.TrbTnpsc.com

T

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி　　தமிழ்　　மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

உரிய விடையைக் குறியீட்டுடன் எழுதுக.　　15×1=15

1) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே ________

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

2) "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3) விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு' இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ________

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

4) குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே ________

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

5) அருந்துணை என்பதைப் பிரித்தால் ________

அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை

6) கூற்று 1: போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்

கூற்று 2: அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது

அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு

இ) கூற்று 1 தவறு, 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

7) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சிபுரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

8) 'உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு' என்னும் கூற்றுக்குச் சான்றாக வாழ்ந்த கலைஞர், 2018 ஆம் ஆண்டு ________ நாளில் தன்னுடைய 94ஆம் வயதில் தமிழர் நெஞ்சில் நிலைத்து நிற்கும் காவியமானார்.

அ) ஜூன் 17 ஆ) ஆகஸ்ட் 7 இ) டிசம்பர் 7 ஈ) ஜூலை 7

9) 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று வழிப்போக்கர் கேட்டது ______ வினா.

'அதோ, அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ________ விடை

அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல்வினா, இனமொழிவிடை

10) போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில் 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன்முதலாகத் ________ மொழியில் தான் மொழிபெயர்க்கப்பட்டது

அ) ஆங்கிலம் ஆ) தமிழ் இ) உருது ஈ) தெலுங்கு

11) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ________

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக

நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்

12) மலைபடுகடாம் எவ்வகை இலக்கியத்தைச் சார்ந்தது?
அ) சங்க இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம் இ) காப்பிய இலக்கியம் ஈ) சிற்றிலக்கியம்

13) 'இறடி' - இச்சொல்லுக்குரிய பொருள் யாது?
அ) சோறு ஆ) தினை இ) இறைச்சி ஈ) அரிசி

14) மலைபடுகடாம் இவ்வாறும் அழைக்கப்படுகிறது.
அ) பொருநராற்றுப்படை ஆ) ஒற்றளபெடை
இ) கூத்தராற்றுப்படை ஈ) பெரும்பாணாற்றுப்படை

15) கெழீஇ-இச்சொல்லில் உள்ள அளபெடை
அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

## பகுதி - II

### பிரிவு - 1

**4×2=8**

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- (21வது வினா கட்டாய வினா)

16) விடைக்கேற்ற வினா அமைக்க:
அ) கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.
ஆ) மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் பெற முடியும்.

17) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

18) உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

19) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

20) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதித்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

21) 'அருமை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**5×2=10**

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:

22) இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க
அ) இயற்கை - செயற்கை ஆ) விதி - வீதி

23) பழமொழிகளை நிறைவு செய்க
அ) ஒரு பானை __________ ஆ) விருந்தும் __________

24) அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25) கலைச்சொற்கள் தருக. அ) Homograph ஆ) Nanotechnology

26) தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.
அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.
(தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)

27) தண்ணீர்குடி, தயிர்குடம் ஆகிய தொகை நிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க

28) காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும்.
இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

## பகுதி - III

### பிரிவு - 1

**2×3=6**

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

29) உரையைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிபடக்கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

வினாக்கள்:

அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் யாவை?

ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?

இ) உயர்வகைத் திறன்பேசியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

30) உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

31) புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- (34ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்) **2×3=6**

32) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

34) அ) 'அருளைப்' எனத் தொடங்கும் நீதிவெண்பாப் பாடலை எழுதுக. (அல்லது)

ஆ) 'தண்டலை' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க:- **2×3=6**

35) வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

36) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்
- இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக

37) அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- **5×5=25**


38) அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39) அ) மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.
(அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.



41) சஞ்சய் தன் தந்தை பாண்டியன் அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினராக வேண்டினான். அவரும் சஞ்சயிடம் 500 ரூபாயும், 29 முத்தமிழ் நகர் பாவாணர் தெரு, திருவண்ணாமலை மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற சஞ்சய் ஆக தேர்வர் தன்னைக் கருதி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42) அ) தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி, திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை; காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்; எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி; இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும்

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and world wide. Though our culture is very old, it has been update consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:- **3×8=24**

43) அ) ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேநீர்க்கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

44) அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க (அல்லது)

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை.
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45) அ) முன்னுரை - இளமையும் கல்வியும் - முதல் விண்வெளிப் பயணம் - இறுதிப் பயணம் - விருதுகளும் அங்கீகாரங்களும் - முடிவுரை - எனும் உட்தலைப்புகளைக் கொண்டு 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ) நீரின்றி இயங்காது உலகம் - நீர்நிலைகள் அடிப்படை - நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம் - நீரைச் சேமிக்கும் வழிகள் - மழைநீரைச் சேமித்தல் - நிலத்தடி நீரைச் சேமிக்கும் வழிமுறைகள் - மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம் - முடிவுரை எனும் உட்தலைப்புகளைக் கொண்டு 'மழைநீர் சேகரிப்பு' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

********

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com